செய்தி வெளியீடு எண்:556 நாள்: 13.09.2011

# தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறையும் விஸ்வேஸ்வரய்யா அருங்காட்சியகமும் (பெங்களூரு) சேர்ந்து நடத்திய மாநில அளவிலான அறிவியல் கருத்தரங்கு

சென்னை எழும்பூரில் உள்ள மாகாண மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 12.09.2011 அன்று காலை 10.00 மணியளவில் “மனித நலனிற்காக வேதியியல்” (Chemisry for Human Welfare: promises and concerns) என்ற தலைப்பில் மாநில அளவிலான அறிவியல் கருத்தரங்கின் துவக்க விழா நடைபெற்றது.

இக் கருத்தரங்கின் துவக்க விழாவில் பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப் பணித்திட்டம்) முனைவர். தர்ம. இராஜேந்திரன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

விழாவினைக் குத்துவிளக்கேற்றி விழா முகவுரை வழங்கித் துவக்கி வைத்து பள்ளிக் கல்வித் துறையின் அரசுச் செயலர் திருமதி. டி. சபிதா இ.ஆ.ப. அவர்கள், மாணவர்களுக்கு, தமிழக அரசு கல்வித்துறைக்கு வழங்கும் பல்வேறு திட்டங்களைச் சுருக்கமாக விளக்கினார். மகிழ்வுடன் கல்வி கற்கும் திட்டங்களை உருவாக்கி, மன அழுத்தமின்றி கல்வி பயிற்றுவிக்கும் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். அகல உழுவதை விட ஆழ உழும் கல்வித் திட்டங்கள் அமுல் படுத்தப்படும் என்றும், முப்பருவத் தேர்வுகள் நடத்தப்பட்டு அந்தந்தப் பருவத் தேர்வுகளில் பாடத் திட்டங்க்ள் அத்துடன் முடிக்கப்படும் என்றும் கூறினார். தனது உரையில் இலவசப் பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், கணிதவியல் கருவிகள், வண்ணப் பென்சில்கள், சீருடைகள் அனைத்தும் வழங்கப்படும் என்றும் கூறினார்கள். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் ஆர்வத்தை அறிந்து உற்சாகப்படுத்தி கல்வி பயில உதவுமாறு கேட்டுக்கொண்டார்.

பெங்களூரு விஸ்வேஸ்வரய்யா அருங்காட்சியகத்தின் கல்வி அலுவலர் திரு. B. R. விஸ்வநாத் அவர்கள் திட்ட விளக்கவுரையாற்றினார்.

சென்னை முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர். சு. நாகராஜ முருகன் அவர்கள் நன்றி நவில காலை தொடக்க விழா இனிதே முடிவுற்றது.

இக்கருத்தரங்கில் 32 மாவட்டங்களிலிருந்து மாணவ மாணவியர் பங்கேற்றனர். இம்மாநில கருத்தரங்கின் மாலை நிறைவு விழாவில் பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப் பணித்திட்டம்) முனைவர். தர்ம. இராஜேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு பரிசுகள் வழங்கினார். S. கணேஷ்வர்– திருநெல்வேலி முதலிடத்தையும், K. மதுமிதா– தூத்துக்குடி இரண்டாமிடத்தையும், S. ஸ்ரீஜனனி– திருநெல்வேலி, D. பிரியா– நாமக்கல் ஆகிய மூவரும் மூன்றாம் இடத்தையும் பெற்றார்கள்.

இவர்களில் முதல் பரிசு பெற்ற மாணவன் S. கணேஷ்வர்– திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பொன்விழா மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர். இவர் செப்டம்பர் 30 ஆம் தேதி புதுடெல்லியில் நடைபெறும் தேசிய அளவிலான அறிவியல் கருத்தரங்கத்தில் கலந்து கொள்வார். மேலும் இப்போட்டியில் பங்கேற்ற அனைது மாணவர்களுக்கும் நான்றிதழ்கள் மற்றும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

விழா ஏற்பாடுகள் அனைத்தையும் பள்ளியின் தலைமையாசிரியையும், சென்னை கிழக்கு மாவட்டக் கல்வி அலுவலருமான (பொ) முனைவர். சூசன் எட்வர்ட் அவர்கள் விறப்பாக செய்திருந்தார்.

**வெளியீடு: –**

**ஆணையர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**